ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2371/35 - 2024 පෙබරවාරි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.15
2371/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 1/2012 (VI)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
2024, பெப்புருவரி 06.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் சேற்று நண்டு கடற்றொழில் முகாமை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப் படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இலங்கை நீர்ப்பரப்புகளில் உள்ள காடார்ந்த சேற்று நண்டுகளின் சேற்று நண்டு பிடித்தல் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

3. ஆளொருவர், 1996, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 948/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கிணங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தொழிற்பாட்டு உரிமமொன்றின் கீழ் தவிர இலங்கை நீர்ப்பரப்புகளில் சேற்று நண்டு பிடித்தல் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலாகாது.

4. ஆளொருவர், இதற்கான அட்டவணையின் படத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறு சேற்று நண்டின் மேலோட்டின் மிகப் பரந்த பாகத்தில் அளவிடப்பட்ட 130 மில்லிமீற்றருக்குக் குறைவான மேலோட்டு அகலத்தைக் கொண்ட (CW) சேற்று நண்டுகளை பிடித்தலோ, விற்பனை செய்தலோ, உடைமையில் வைத்திருத்தலோ, பதனிடுதலோ அல்லது ஏற்றுமதி செய்தலோ ஆகாது.


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

5. ஆளொருவர், முட்டைகளைச் சுமந்துள்ள (முட்டைகளையுடைய) சேற்று நண்டுகளைப் பிடித்தலோ, விற்பனை செய்தலோ, உடைமையில் வைத்திருத்தலோ, பதனிடுதலோ, ஏற்றுமதி செய்தலோ அல்லது அவற்றிலிருந்து முட்டைகளை அகற்றுதலோ ஆகாது.

6. வலைகளில் அல்லது வேறு மீன்பிடிக் கருவிகளில் பிடிக்கப்படுகின்ற 130 மில்லிமீற்றருக்குக் குறைவான மேலோட்டு அகலத்தைக் கொண்ட சேற்று நண்டுகளும் முட்டைகளைச் சுமந்துள்ள (முட்டைகளையுடைய) சேற்று நண்டுகளும் உயிருடன் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

7. அமைச்சர், தேவைப்பாட்டுக்கிணங்க அல்லது ஒவ்வொரு மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு ஒருமுறை, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் விதப்புரையின் மீது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழ் அவரினால் செய்யப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளில் நண்டு பிடிப்பதற்கான மூடிய பருவகாலங்கள் மற்றும் திறந்த பருவகாலங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதி, தேவைப்பாட்டின்மீது அல்லது ஒவ்வொரு மூன்றாண்டு காலப்பகுதிக்கு ஒரு முறை, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் விதப்புரையின்மீது அத்தகைய திறந்த பருவகாலங்களின்போது பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும் சேற்று நண்டுகளின் அளவைத் தீர்மானித்தல் வேண்டும்.

9. ஆளொருவர், சேற்று நண்டுகளைப் பிடிக்கையில் கடலடியை அல்லது வாழிடத்தின் கரைகளை தூர்வாருதலோ அல்லது சேதமாக்குதலோ ஆகாது.

10. பணிப்பாளர் தலைமையதிபதி, உற்பத்தித்தரவு, ஏற்றுமதித்தரவு அல்லது சேற்று நண்டு கடற்றொழில் தொடர்பான வேறு ஏதேனும் தரவை வழங்குமாறு சேற்று நண்டு பிடித்தலில் ஈடுபடுகின்ற மீனவர்கள், சேற்று நண்டு சேகரிப்பவர்கள் மற்றும் சேற்று நண்டு ஏற்றுமதியாளர்களிடமிருந்து காலத்துக்குக் காலம் கோரலாம்.

11. இவ்வொழுங்குவிதிகளில்-

"சேற்று நண்டுகள்" என்பது, இலங்கை நீர்ப்பரப்புகளில் வாழ்கின்ற (ஸ்கைல்லா செரட்டா) இனங்களைச் சார்ந்தவை எனப் பொருள்படும்.


"காடார்ந்த சேற்று நண்டு" என்பது, நீரியல் முறையில் பண்படுத்தப்பட்ட சேற்று நண்டுகள் தவிர்ந்த இயற்கைச் சூழலில் இயற்கையாகப் பெருகுகின்ற சேற்று நண்டுகள் எனப் பொருள்படும்.

"பதனிடுதல்" என்பது, விற்பனை செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக நண்டுகளை அவித்தல், அவற்றின் மேலோடுகளை அகற்றுதல், குடல்கள் மற்றும் செவுள்களை அகற்றுதல், மாமிசத்தை துண்டுகளாக்குதல் அல்லது அதனை அகற்றுதல் எனப் பொருள்படும்.

"மேலோட்டு அகலத்தைக் கொண்ட (CW)" என்பது, இதற்கான அட்டவணையின் படத்தில் குறித்துக்காட்டப்பட்ட மிகப்பரந்த நீளத்தில் மேலோட்டின் புள்ளிகளுக்கிடையில் அளவிடப்பட்ட நீளம் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

[ஒழுங்குவிதி 4]




EOG 02-0110

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.